## முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்,

# விளையாட்டை மாபெரும் இயக்கமாக மாற்றி வருகின்றன!

## விருதுநகரில் ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்கி – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உற்சாக உரை!

**விருதுநகர், அக்.4-**

**விருதுநகரில் அரசு நலத்திட்ட உதவிகள், கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கும் விழாவும் மற்றும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு ஊராட்சித் தலைவர்களுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பரிசுகளையும் வழங்கி, பாராட்டிப் பேசினார்.**

**அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் திட்டத்தின் கீழ், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமை அடைகிறேன்.

### சென்னைக்கு வெளியே

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் எனக்குக் கூடுதல் பெருமை, கூடுதல் மகிழ்ச்சி. ஏனென்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், என்னை தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக நியமித்த பிறகு, சென்னைக்கு வெளியே நான் கலந்துகொள்ளும் முதல் அரசு நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சி.

துணை முதலமைச்சராக நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பாக, நான் கலந்துகொள்கின்ற முதல் நிகழ்ச்சியும் இந்த நிகழ்ச்சிதான். விளையாட்டு உபகரணங்கள் மட்டுமல்ல, மாற்றுத் திறனாளிகள் 100 பேருக்கு மோட்டார் வாகனம், இரண்டாயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதும் இந்த நிகழ்ச்சிக்குக் கூடுதல் பெருமை.

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் திட்டத்தை, மதுரையில் இந்த வருடம் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி வைத்தோம். தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 525 கிராம பஞ்சாயத்துகளுக்கும், ரூ.86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களை வழங்கியிருக்கிறோம்.

### வீர விளையாட்டுகள்

இதுவரை, தமிழ்நாடு முழுக்க 18 மாவட்டங்களில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தென் மாவட்டங்கள் என்றாலே, அது வீரத்துக்கு பெயர் பெற்ற மாவட்டங்கள். வீரத்தில் மட்டுமல்ல, வீர விளையாட்டுகளிலும் தலைசிறந்த மாவட்டங்கள். குறிப்பாக, விருதுநகர், கோவில்பட்டி, பாளையங்கோட்டை போன்ற ஊர்களில் இருந்து ஏராளமான திறமைமிகு விளையாட்டு வீரர்கள் உருவாகியிருக்கிறார்கள். உருவாகிக்கொண்டும் வருகிறார்கள்.

நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலம் நடத்தப்படும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், தமிழ்நாட்டு விளையாட்டினை, ஒரு மாபெரும் இயக்கமாகவே மாற்றி வருகிறது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கென இந்த வருடம் 80 கோடி ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி, 36 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

5 பிரிவுகளில் போட்டியாளர்கள் பங்கேற்று வருகின்றனர். சென்ற ஆண்டு முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் 6 லட்சத்து 71 ஆயிரம் பேர். இந்த ஆண்டு முதலமைச்சர் கோப்பை போட்டியில் கலந்து கொண்டவர்கள் 11 லட்சத்து 56 ஆயிரம் பேர். இதுவே இந்தப் போட்டியின் மிகப்பெரிய வெற்றி என்பதற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

### பரிசுத்தொகை உயர்வு!

தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகளில் இருந்து, தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ‘முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கான’ பரிசுத்தொகையை, நம் முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி இந்த முறை பரிசுத்தொகை மட்டும் ரூபாய் 37 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள்.

இந்தாண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில், மாவட்ட அளவில் வென்றவர்களுக்கு, இங்கே பரிசுகளை உங்கள் முன்பு வழங்கவிருக்கிறோம். அவர்களுக்கு இந்த நேரத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்குக்கூட, நிறைய விளையாட்டுத் துறைச் சாதனையாளர்கள் வந்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த, ஃபென்சிங் வீரர், தம்பி ஜிஷோ நிதி இங்கே வருகை தந்திருக்கிறார்.

தம்பி ஜிஷோ நிதி, லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் ஃபென்சிங் சாம்பியன்சிப் போட்டியில் பங்கேற்று வெண்கலம் வென்றவர். குஜராத், பஞ்சாப், கோவா, அசாம் மாநிலங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் 4 முறை தங்கப்பதக்கத்தை வென்று சாதனை படைத்திருக்கிறார்.

### பாராட்டுகள்– வாழ்த்துகள்

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 7 தங்கப்பதக்கம், 2 வெள்ளிப்பதக்கம் , 2 வெண்கலப்பதக்கம் வென்று, நம் தமிழ்நாட்டுக்குப் பெருமைத் தேடித் தந்தவர்தான் அருமை சகோதரர். இன்றைக்கு இந்திய இராணுவத்தில் நாட்டைக் காக்கின்ற பணியை அவர் செய்து வருகிறார்.

இப்படிப் பலருக்கும் முன்மாதிரியாக திகழும் அவருக்கு நாம் அனைவரும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம். அதேபோல, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கூடைப்பந்து வீராங்கனை தங்கை சுந்தரி இங்கே வருகை தந்திருக்கிறார்.

38-வது நேஷனல் யூத் பேஸ்கட் பால் சாம்பியன்சிப்பில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டு அணியில் இடம்பெற்றவர்தான் சகோதரி சுந்தரி அவர்கள்.

விளையாட்டுத்துறையில், சாதிக்கத் துடிக்கும் மகளிருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், சாதனைகளைப் படைத்து வரும் அவருக்கு, நாம் அனைவரும் நம் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம்.



இந்த இரண்டு பேர் மட்டுமல்ல, தமிழ்நாட்டு வீரர்கள், வீராங்கனைகள், உலக அளவில், பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து படைத்து வருகிறார்கள்.

### செஸ் ஒலிம்பியாட் போட்டி

சில நாட்களுக்கு முன்பு, ஹங்கேரியில் நடந்த 45-வது பிடே செஸ் ஒலிம்பியாட் போட்டி. உங்களுக்குத் தெரியும் 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்னையில் முதன்முறையாக வெற்றிக்கரமாக நடத்திக் காட்டினோம். இந்த ஆண்டு 45-வது பிடே செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் அணி தங்கப் பதக்கங்களை வென்றது.

தங்கம் வென்ற இந்திய செஸ் அணியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர்கள் தம்பி குகேஷ், பிரக்ஞானந்தா, ஸ்ரீநாத் நாராயணன், தங்கை வைஷாலி ஆகியோர் இடம் பெற்று சிறப்பான பங்களிப்பை அளித்தார்கள்.

அவர்களுக்கு, நம் முதலமைச்சர் அவர்கள், மொத்தம் 90 லட்சம் ரூபாயை, உயரிய ஊக்கத்தொகையாக வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்தினார்கள். அதேபோல இந்த வருடம் பாரீஸில் நடந்த, பாரா ஒலிம்பிக் போட்டிக்கு, தமிழ்நாட்டில் இருந்து 6 மாற்றுத் திறனாளி வீரர்களை அனுப்பி வைத்தோம்.

அந்த ஆறு வீரர்களுக்கும், போட்டிக்குச் செல்வதற்கு முன்பாகவே, நம் முதலமைச்சர் அவர்கள் தலா 7 லட்சம் ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கி அனுப்பி வைத்தார்கள். சென்ற ஆறு பேரில் 4 பேர் பதக்கம் வென்று, இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தார்கள். அந்த 4 பேருக்கும் மொத்தம் 5 கோடி ரூபாய் அளவுக்கு, நம் முதலமைச்சர் அவர்கள் பரிசுத்தொகையை வழங்கினார்கள்.

இந்த மூன்று வருடங்களில் மட்டும், நம் முதலமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட 1,300 விளையாட்டு வீரர்களுக்கு 38 கோடி ரூபாய்க்கும் மேலாக, உயரிய ஊக்கத்தொகையை வழங்கி இருக்கிறார்.

### 100 வீரர்களுக்கு அரசுப்பணி

அரசு மற்றும் அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில், விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்று விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கழக அரசு அமைந்த பிறகு, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளின் பேரில், முதற்கட்டமாக 100 விளையாட்டு வீரர்களுக்கு, அரசுப்பணி வழங்க இருக்கிறோம் என்பதை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளிய, மாற்றுத் திறன்கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு உதவுவதற்காகத்தான் நம் முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பில் துவங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் தொடர்ந்து பல உதவிகளைச் செய்து வருகிறோம்.

இந்த அறக்கட்டளையின் மூலம், உதவி பெற விரும்புகின்ற விளையாட்டு வீரர்கள் டி.என்.சி.எப் (TNCF) என்ற இணையதளத்தில் விண்ணப்பித்தால் போதும். அதை நாங்கள் பரிசீலனை செய்து, உதவித்தொகை உடனுக்குடன் வழங்கப்படுகிறது.

சமீபத்தில் தெற்கு ஆசியாவிலேயே, முதல் முறையாக, பார்முலா 4 இரவு நேர கார் பந்தயத்தை, சென்னையில் கடந்த மாதம் வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். கடந்த ஜனவரி மாதம் கேலோ இந்தியா இளையோர் போட்டிகளை, தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக நாம் நடத்திக் காட்டினோம்.

### கேலோ இந்தியா போட்டி

கேலோ இந்தியா போட்டியில், 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு முதன் முறையாக, பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல, நம் திராவிட மாடல் அரசின் பல்வேறு துறைகளும் இன்றைக்கு மகத்தான சாதனைகளைப் படைத்து வருகின்றன.

வறுமை ஒழிப்பு, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, மகளிர் நலன் உள்ளிட்ட 13 துறைகளில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது என்று ஒன்றிய அரசின் நிதி ஆயோக் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமல்ல, நேற்றைய தினம் ஒரு செய்தி வந்தது, ஒன்றிய அரசின் புள்ளியியல் துறை சார்பில், நேற்று ஒரு புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே அதிகத் தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான் என்றும், இந்தியாவிலேயே அதிகளவில் வேலைவாய்ப்பை தரக்கூடிய மாநிலங்களின் பட்டியலில், தமிழ்நாடுதான் முதலிடம் என்றும் அந்தப் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

இப்படி எல்லாத்துறைகளிலுமே, தமிழ்நாடு இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு, கிராமங்களில் இருந்து, நிறைய விளையாட்டுத்துறை திறமையாளர்கள் வர வேண்டும் என்ற அடிப்படையில்தான் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பெயரில், எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும், விளையாட்டுத்துறை சார்பாக, முதல்முறையாக கலைஞர் அவர்களின் பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால், அது, இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்தான்.

### வீழ்த்த முடியாத அரசியல் வீரர்

நீங்கள் யோசிக்கலாம் ஏன் இந்த திட்டத்திற்கு கலைஞர் ஸ்போர்ட் கிட் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறோம் என்று. ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கக்கூடிய அத்தனை குணங்களும், திறமைகளும், கலைஞர் அவர்களிடம் இருந்தது. அவர் ஒரு ஆல்ரவுண்டர். அதனால்தான், இந்தத் திட்டத்திற்கு அவரின் பெயரை சூட்டினோம். எப்போதும், யாராலும் வீழ்த்த முடியாத ஓர் அரசியல் வீரராக, கலைஞர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் திகழ்ந்தார்கள்.

எனவே, கலைஞர் அவர்களின் பெயரால், இந்த விளையாட்டு உபகரணங்கள், இன்று வழங்கப்படுகின்றன. இவற்றைப் பெறக்கூடிய விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள், கலைஞர் அவர்களுக்கு இருந்த அத்தனை குணங்களையும், திறமைகளையும், நீங்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

இன்று கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸைப் பெற வருகை தந்துள்ள, அத்தனை ஊராட்சித் தலைவர்களுக்கும், அந்த ஊராட்சிகளின் முகங்களான மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, மாவட்ட அளவில் வென்று, பரிசுகளைப் பெற உள்ள வீரர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

உங்களுக்கு நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி. மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாணிக்கம் தாகூர், நவாஸ்கனி, மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தங்கபாண்டியன், ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், அசோகன், காதர் பாட்சா (எ) முத்துராமலிங்கம், வெங்கடேசன், ராஜா, மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெயசீலன் ஐ.ஏ.எஸ்., வாள்வீச்சு விளையாட்டு வீரர் ஜிசோ நிதி, கூடைப்பந்து விளையாட்டு வீராங்கனை சுந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், மணிமாறன், ஜெயபாலன் மற்றும் ஊராட்சித் தலைவர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 01.10.2024 அன்று விருதுநகர், அரசு மருத்துவ கல்லூரி கலையரங்கத்தில், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 450 ஊராட்சிகளுக்கு 564 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பை வழங்கி, முதலமைச்சர் கோப்பை 2024 போட்டியில் மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ப.மாணிக்கம் தாகூர், டாக்டர் ராணி ஸ்ரீகுமார், செ. ராபர்ட் ப்ரூஸ், கே. நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், ஏ.எம்.எஸ்.ஜி. அசோகன், டாக்டர். ஏ.ஆர். ஆர். ரகுராமன், எஸ். தங்கபாண்டியன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வீ.ப. ஜெயசீலன், கு.ப.ஜிஷோ நிதி (வாள் வீச்சு விளையாட்டு வீரர்), பா. சுந்தரி (கூடைபந்து விளையாட்டு வீராங்கனை) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 01.10.2024 அன்று விருதுநகர், அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 450 ஊராட்சிகளுக்கு 564 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பை வழங்கி, ரூ. 67.48 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா நாடாளுமன்ற உறுப்பினர்கள் ப.மாணிக்கம் தாகூர், டாக்டர் ராணி ஸ்ரீகுமார், செ. ராபர்ட் ப்ரூஸ், கே. நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், ஏ.எம்.எஸ்.ஜி. அசோகன், டாக்டர். ஏ.ஆர். ஆர். ரகுராமன், எஸ். தங்கபாண்டியன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வீ.ப. ஜெயசீலன், கு.ப.ஜிஷோ நிதி (வாள் வீச்சு விளையாட்டு வீரர்), பா. சுந்தரி (கூடைபந்து விளையாட்டு வீராங்கனை) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.